மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான மா.சுப்பிரமணியன் நேற்று (10-9-2024) நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் செப்.17 அன்று நடைபெற உள்ள தி.மு. கழக பவள விழா மற்றும் முப்பெரும் விழா பந்தல் அமைக்கும் பணிகளை முடுக்கிவிட்டு, அந்நிகழ்ச்சி நடைபெறுவதன் அடையாளமாக ராட்சத பலூனை பறக்கவிட்டார். உடன் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, பகுதி கழகச் செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், மாவட்ட கழக துணைச் செயலாளர் பாலவாக்கம் த.விஸ்வநாதன், மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு தாரை வார்த்து

இந்திய நிதி இறையாண்மையின் அடித்தளத்தை தகர்க்கும் மோடி அரசு!

‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கடும் கண்டனம்!

சென்னை, செப்.11-

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு தாரை வார்த்து, இந்திய நிதி இறையாண்மையின் அடித்தளத்தை தகர்க்கிறது மோடி அரசு என ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து 10.09.2024 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

மோடி அரசு உலகளவில் தனது நிதி இறையாண்மையை நிலைநாட்டும் பொருட்டு ‘செல்வ இறையாண்மை நிதியத்தை’ உருவாக்க முடிவு செய்துள்ளது. அதற்காக நாட்டின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளையும், சொத்துக்களையும்விற்று நிதி திரட்டுவது என்ற மிக ஆபத்தான பாதையை தேர்வு செய்துள்ளது. கண்ணை விற்று சித்திரம் வாங்குவது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் இது.

தீக்கதிர்
2024 செப்.10 செவ்வாய்க்கிழமை
இறையாண்மையின் அடித்தளம்
மோடி அரசு உலகளவில் தனது நிதி இறையாண்மையை நிலைநாட்டும் பொருட்டு ‘செல்வ இறையாண்மை நிதியத்தை’ உருவாக்க முடிவு செய்துள்ளது. அதற்காக நாட்டின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளையும், சொத்துக்களையும் விற்று நிதி திரட்டுவது என்ற மிக ஆபத்தான பாதையை தேர்வு செய்துள்ளது. கண்ணை விற்று சித்திரம் வாங்குவது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் இது.
உலக முதலாளித்துவத்தின் நெருக்கடி எவ்விதத் தீர்வும் இல்லாமல் நாடுகளை அதிதீவிர நெருக்கடிகளின் பிடியில் சிக்கச் செய்கிறது. இந்தப் பின்னணியில் பல நாடுகள் தங்களது நிதி இறையாண்மையை உறுதி செய்வதற்காக - அதாவது, எந்தச் சூழலிலும் திவால் ஆகிவிடாமல் நிதி ரீதியாக வலுவாக நிலைநாட்டிக் கொள்வதற்காக - வலுவான செல்வ ஆதாரங்கள் கொண்ட நிதியத்தை உருவாக்கி பேணி வருகின்

உலக முதலாளித்து வத்தின் நெருக்கடி எவ்விதத் தீர்வும் இல்லாமல் நாடுகளை அதிதீவிர நெருக்கடிகளின் பிடியில் சிக்கச் செய்கிறது. இந்தப் பின்னணியில் பல நாடுகள் தங்களது நிதி இறையாண்மையை உறுதி செய்வதற்காக அதாவது, எந்தச் சூழலிலும் திவால் ஆகிவிடாமல் நிதி ரீதியாக வலுவாக நிலைநாட்டிக் கொள்வ தற்காக வலுவான செல்வ ஆதாரங்கள் கொண்ட நிதியத்தை உருவாக்கி பேணி வருகின்றன. குறிப்பாக சீனா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம் உள்பட 40 நாடுகள் இத்தகைய நிதியத்தை சமீப காலத்தில் உருவாக்கி வலுப்படுத்திக் கொண்டுள்ளன. இந்தியாவில் இதுவரை அப்படி ஒரு நிதியம் இல்லை. உலகளாவிய பல்வேறு வகையான நெருக்கடிகள் முற்றி வரும் நிலையில், இத்தகைய ஒரு நிதியத்தை உருவாக்கிக் கொள்ள ஒன்றிய அரசு திட்டமிட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால் இதில் அதிர்ச்சிகரமான அம்சம் என்னவெனில், ஒன்றிய அரசுக்கு சொந்தமான 48 பொதுத்துறை நிறுவனங்களில், அரசுக்கு சொந்தமான பங்குகளை கணிசமாக விற்று அதன்மூலம் 50 லட்சம் கோடி ரூபாயை திரட்டுவது என மோடி அரசு திட்ட மிட்டு வருவதாக வெளியாகியுள்ள தகவல் தான்.

இப்படி திரட்டப்படும் நிதியைக் கொண்டு இந்திய இறையாண்மை நிதியத்தை உருவாக்கி, அதை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முதலீடு செய்து பொருளாதாரத்தை வலுப்படுத்திக் கொள்ளலாம் என ஒன்றிய அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

உலகப் பெரும் முதலாளிகளின் லாபவேட்கைக்கு சேவை செய்யும் விதத்தில் நவீன தாராளமயக் கொள்கைகளை உச்சக்கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ள மோடி அரசு தனது ஆட்சிக் காலம் முழுவதிலும் பொதுத் துறை நிறுவனங்களை பலவீனப்படுத்துவது, தனியார்மயமாக்குவது, எஞ்சியுள்ள பங்குகளையும் விற்றுத் தீர்ப்பது, அவற்றின் சொத்துக்களை எல்லாம் பெரும் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு மடை மாற்றுவது என முற்றிலும் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதை தடுத்து நிறுத்த தொழிற் சங்கங்களும், தொழிலாளர் வர்க்கமும் வலுவான போராட்டங்களை நடத்திய வண்ணம் உள்ளன. ஆனால் எதற்கும் செவி சாய்க்காத மோடி அரசு, தற்போது ஒட்டுமொத்த பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு வாரி வழங்குவது என ஆலோசித்திருப்பது மிக மிக ஆபத்தானது. இந்த பொதுத்துறை நிறுவனங்கள் தான் இந்திய நிதி இறையாண்மையின் அடித்தளங்கள் என்பதை மறந்து அவற்றை தகர்க்கப் பார்க்கிறது மோடி அரசு.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப் 11-

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

வணிகர் பெருமக்களின் நலனுக்காக உழைத்த அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையைச் சேர்ந்த அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலக்குழுத் தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையிலும் வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையிலும் செந்தில் சுரேஷ்,கே.குமரேசன்,எம்.சி.எழில்அரசு ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் மு.மனோகரன், மாஸ்டர் பெ.சேகர் மற்றும் பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டனர்.

கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த

சென்னையைச் சேர்ந்த ஐவரின் குடும்பத்திற்கு தலா ரூ.2 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, செப்.11-

சென்னையைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் தஞ்சாவூர் மாவட்டம் கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர். அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு:-

சென்னை, எழும்பூர், நேருபூங்கா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 5 இளைஞர்கள், தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி பூண்டி மாதா கோவிலுக்கு சென்றுவிட்டு 8.9.2024 அன்று முற்பகல் திருச்சி செங்கரையூர் கொள்ளிடம் ஆற்றுப் பாலத்தின் கிழக்குப் பகுதியில் குளிப்பதற்காக ஆற்றில் இறங்கிய போது, கிஷோர் (வயது 20) த/பெ. ஜியாவுதீன்; கலை வேந்தன் (வயது 19) த/பெ.சண்முகம்; ஆண்டோ (வயது 21) த/பெ.சார்லஸ்; பிராங்கிளின் (வயது 23) த/பெ.சார்லஸ்; மனோகர் (வயது 19) த/பெ.வெங்கடேசன் ஆகிய ஐந்து நபர்கள் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். .

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

உடல்நலக்குறைவு ஏற்பட்டு - புதுடெல்லி - ‘எய்ம்ஸ்’ மருத்துவமனையில் தீவிர சிகிச்சை!

மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி - விரைவில் நலம்பெற வேண்டுமென விழைகிறேன்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப்பதிவு!

சென்னை, செப்.11

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு புதுடெல்லி ‘எய்ம்ஸ்’ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதையொட்டி, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் விரைவில் நலம்பெற வேண்டுமென விழைகிறேன்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்களின் உடல்நிலை பாதிப்படைந்துள்ளது குறித்து அறிந்து கவலை கொள்கிறேன். அவர் விரைவில் நலம்பெற விழைகிறேன்.

மருத்துவர்கள் குழு அர்ப்பணிப்போடு மேற்கொண்டு வரும் முயற்சிகள் அவர் மீண்டும் பழைய வலிமையோடு திரும்ப உதவும் என நம்புகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

புழல் எம்.நாராயணன் முன்னிலையில் - இ.கண்ணப்பன் தலைமையில்

மாதவரம் வடக்குப் பகுதி 16-வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கினார்!

சென்னை, செப்.11-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 16வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் மணலி புதுநகர் பகுதியில் அமைந்துள்ள புனித அந்தோணி யார் சமூக நலக் கூடத்தில் நடைபெற்றது.

16வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, 16வது வட்டத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் சுமார் 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ கலந்து கொண்டு முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். பின் பொது உறுப்பினர்கள் அனைவருக்கும் அறுசுவை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் என்.பரந்தாமன், பகுதி கழக நிர்வாகிகள் கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், கே. சிவசங்கரன், நா.மோகன் குமார் நாகூரார், பா.சந்திரன், பி.தரணி, வி.திராவிட வீரன், பி.நிர்மல் குமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கோபாலகிருஷ்ணன், கே.எஸ்.டி.நேரு காந்தி, வட்ட கழக நிர்வாகிகள் இ.அருள், இ.வெங்கடேசன், என் . பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ்குமார், ஆர்.குமரவேல், மாரி, கே.ஏ.ரமேஷ், ராஜ்மோகன், வக்கீல் பி.கண்ணன், சி.எம்.ராஜா, பர்மா நகர் வக்கீல் சுரேந்தர், சரவணன், தினேஷ் சங்கர், டோமினிக் பிரான்சிஸ், தேவராஜ், செமின் எடிசன், எலந்தனூர் வி.சிவப்பிரகாஷ், மணிகண்டன், உதயா, நைனியப்பன், பார்கவி, மஞ்சு நாதன், காமராஜ்புரம், கிருபாகரன், குளக்கரை மஞ்சுநாதன், ரிஷி குமார், தமிழ், பவின், மதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் ஆணைப்படி, முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்துவது எனவும், வீடுகள் தோறும் கழக கொடி ஏற்றி கழக பவள விழாவை கொண்டாடுவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இறுதியில் குமரவேல் நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை 16 வது வட்டச் செயலாளர் இ கண்ணப்பன் செய்திருந்தார்.

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் எம்.பி. - எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

102வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் பி.சந்திரசேகர் தலைமையில்!

சென்னை, செப்.11-

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் வடக்குப் பகுதி 102வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (11.9.2024, புதன்கிழமை) மாலை 6 மணியளவில் நெ. 15/1, தர்மராஜா கோவில் தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010-ல் அண்ணாநகர் வடக்குப் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் இல்லம் அருகில் 102வது வட்டக் கழக அவைத்தலைவர் இரா.ஆனந்தராஜ் தலைமையில் நடைபெறுகிறது.

திருமதி. ராணி ரவிச்சந்திரன், மா.மோகன், ஜெ.வி. முருகன், வி.ருக்மணி, ஆர். குமரவேல், செ.குமரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் என்.பலராமன், சவுந்தர்ராஜன், இ.மோகன், இரா.பிரபாகரன், பா.பாலாஜி, அருண்குமார் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டச்செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., ச.பரமசிவம், கார்த்திக் மோகன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

அம்பத்தூர் கிழக்கு 84 ‘அ’ வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் த.வ.லால் வேண்டுகோள்!

சென்னை, செப். 11-

அம்பத்தூர் கிழக்கு - 84 அ வட்டச் செயலாளர் த.வ.லாலின் அறிக்கை வருமாறு:

அம்பத்தூர் கிழக்கு பகுதியில் 84 அ வட்டத்தில் உள்ள பொன்னியம்மன் கோயில் வளாகம், பொதுநல சமூக கூடம், பட்டரைவாக்கத்தில் எனது தலைமையில் இன்று (11.09.2024) மாலை 6.30 மணிக்கு பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் - சென்னை கிழக்கு மாவட்ட செயலாளருமான பி.கே.சேகர்பாபு பங்கேற்று ஆலோசனைகள் வழங்குகின்றார்.

இக்கூட்டத்தில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. (வடக்கு பகுதிச் செயலாளர்) பி.டி.சி.செல்வராஜ் (மாநில தொழிற்சங்கத்தலைவர்), தொகுதியின் தலைமையிடப் பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், எம்.டி.ஆர்.நாகராஜ், (கிழக்கு பகுதி செயலாளர்), பி.கே.மூர்த்தி (தலைமை செயற்குழு உறுப்பினர் 7வது மண்டலகுழு தலைவர்) அம்பத்தூர் தெற்குபகுதிச் செயலாளர் டி.எஸ். பி.ராஜகோபால் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

அம்பத்தூர் கிழக்கு பகுதி 84அ வட்டத்துக்கு உட்பட்ட மாவட்ட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் பொதுகுழு உறுப்பினர்கள் கிழக்கு பகுதி உட்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் BLA2, BLC உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னாள் நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள், மாணவர் அணி, இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் த.வ.லால் தெரிவித்துள்ளார்.

மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் மணலி புது நகரில் நடைபெற்றது இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் அறிவழகி பாலகிருஷ்ணன், என். பரந்தாமன் ஆ. ராஜேந்திரன், கே.சிவசங்கரன், நா. மோகன் குமார் நாகூர் , பா. சந்திரன், பி. தரணி, திராவிட வீரன், பி, நிர்மல் குமார், எஸ். கோபாலகிருஷ்ணன், நேரு காந்தி, அருள், வெங்கடேசன், பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ்குமார், குமரவேல் ,மாரி, ரமேஷ், ராஜ்மோகன், பி. கண்ணன், சி .எம். ராஜா, வக்கீல் சுரேந்தர், சரவணன், தினேஷ் சங்கர், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமீன் எடிசன் எலந்தனூர் வி சிவப்பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.